**எண். 108/2025** **நாள்: 08.08.2025**

**தமிழ் நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்**

**எண்.3, தேர்வாணையச் சாலை, சென்னை . 600 003**

**செய்தி வெளியீடு**

தமிழ்நாடு மீன்வள சார்நிலைப் பணியில் அடங்கிய மீன்துறை சார் ஆய்வாளர் (மீன்வள மற்றும் மீனவ நலத்துறை) பதவிக்கு நேரடி நியமனம் செய்யும் பொருட்டு, (தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், அறிவிக்கை எண். 29/2022 நாள் 13.10.2022) நடைபெற்ற தேர்வில் விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் தரவரிசை விவரங்கள் 02.06.2023 அன்று தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டன.

மேற்படி பதவிக்கான **மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு (இரண்டாம் கட்டம்) மற்றும் கலந்தாய்வு 26.08.2025** அன்று தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், எண்.3, தேர்வாணையச் சாலை, (பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் கோட்டை ரயில் நிலையம் அருகில்) சென்னை - 600 003-ல் உள்ள தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

தேர்வர்களின் மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை எண் / இடஒதுக்கீட்டு விதி / காலிப்பணியிடங்களின் அடிப்படையில் மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு தற்காலிகமாக அழைக்கப்படும் தேர்வர்களின் பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு (இரண்டாம் கட்டம்) மற்றும் கலந்தாய்விற்கான நாள், நேரம் மற்றும் விவரங்கள் அடங்கிய அழைப்புக்கடிதத்தினைத் தேர்வர்கள் தேர்வாணைய இணையதளமான www.tnpsc.gov.in – லிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு (இரண்டாம் கட்டம்) மற்றும் கலந்தாய்விற்கு அழைக்கப்பட்ட தேர்வர்களுக்கு அதற்கான விவரம் SMS மற்றும் E-mail மூலம் மட்டுமே தெரிவிக்கப்படும். மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு (இரண்டாம் கட்டம்) மற்றும் கலந்தாய்விற்கான அழைப்பாணை தனியே தபால் மூலம் அனுப்பப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு (இரண்டாம் கட்டம்) மற்றும் கலந்தாய்விற்கு அழைக்கப்படும் அனைவருக்கும் பணி நியமனம் வழங்கப்படும் என்பதற்கான உறுதி அளிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. தேர்வர்கள் மேற்படி மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு வரத் தவறினால் அவர்களுக்கு மறுவாய்ப்பு அளிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ச. கோபால சுந்தரராஜ், இ.ஆ.ப.,

செயலாளர்